REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 9உ புதன் (24—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 10உ வியாழன் (25—11—54) [இதழ் 140

## ஒப்பந்தம் பலன் தருகிறது!

பாகிஸ்தான் அமெரிக்காவுடன் செய்துகொண்டுள்ள இராணுவ உதவி ஒப்பந்தப்படி, அமெரிக்க ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு முதல் கப்பல் ஒன்று கராச்சி வந்து சேர்ந்துவிட்டது எனத் தெரிகிறது. டாங்கிகள் உட்பட பலவகையான இராணுவ தளவாடங்கள் கப்பலிலிருந்து இறக்கப்படுகின்றன. இராணுவத் தளவாடங்களை அமெரிக்காவிடமிருந்து பெறுவதுபற்றிக் குறிப்பிட்ட பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, "பாகிஸ்தான் தனது தற்காப்பைப் பலப்படுத்தி சுதந்திர நாடுகளிடையே தனக்குரிய மதிப்பைப் பெற முடிவு செய்திருப்பதற்கு இதுவே சான்றாகும்," என்றார்.

இராணுவ தளவாடங்களுடன், 10 கோடி டாலர் பொருளாதார உதவியும், அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு உதவுகிறதென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

# தமிழர்களுக்கு திரு-கொ. போலீசார் இழைத்த கொடுமைகள்!

## பண்டித நேரு அறிக்கை கேட்கிறார்?

### பட்டம் தாணுவின் அடக்குமுறை ஆட்சி: புகைப் படங்களுடன் புத்தகமாக டில்லியில் கொடுக்கப்படுகிறது

*நாகபுரி பி. சோ. கட்சி மாநாட்டிற்கு அனுப்பப்படும்*

திரு-கொச்சி போலீசாரின் அடக்குமுறை மூலம் திருவாங்கூர் தமிழர்களின் அறப்போரை அடக்கவும், தமிழகத் தலைவர்களை சிறையிலடைக்கவும் பட்டம் தாணுவின் சர்க்கார் கையாளும் ஜனநாயக விரோதச் செயல்கள் கண்டிக்கத்தக்கன என்பதை எடுத்துக்காட்டி, அறப்போரில் ஈடுபட்ட தமிழர் தலைவர்களையும், தொண்டர்களையும் திரு-கொச்சி போலீசார் தாக்குகிறார்கள்—வீடு நுழைந்து கொடுமை புரிகிறார்கள் என்பவற்றைச் சுட்டிக்காட்டி, மத்திய சர்க்காருக்குப் பலர் அறிவிப்பு தந்துள்ளனர்.

தமிழர்கள் மீது, 'புனிதப் போர்' நடத்தும் நிலைமை அங்கே காணப்படுகிறது என்று திரு-தமிழர் தலைவர்கள் அறிக்கை மேல் அறிக்கை விடுத்தனர்.

தமிழர்கள் மீது அவிழ்த்துவிடப்பட்டிருக்கும் அநியாய அடக்குமுறையினைக் கண்டிக்கவும், துப்பாக்கிப்பிரயோகம் பற்றிய விசாரணையில் நியாயம் கிடைக்காது என்பதை எடுத்துக்காட்டவும், திரு-தமிழ்நாடு காங்கிரசார் துப்பாக்கிப் பிரயோக விசாரணையை பகிஷ்கரித்தனர்.

கடிதங்கள், கண்டனங்கள், அறிக்கைகள் ஆகியவைகள் மூலம், பட்டம் தாணுவின் போலீசார் நடத்தும் அடக்குமுறை தர்பார் பற்றி பண்டித நேருவுக்கு பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் தெரிவித்தனர்.

இப்போது, புதுடில்லியில், தோழர் நேசமணி, பண்டித நேருவைப் பேட்டி கண்டு, போலீசாரின் கொடுமைகள் பற்றி எடுத்துக்கூறினார் என்று தெரிகிறது.

பட்டத்தின் போலீசார் புரியும் அட்டூழியங்களை விளக்க, புகைப்படங்கள் கொண்ட வெளியீடு ஒன்றை நேருவிடம் நேசமணி கொடுத்தார் என்று தெரிகிறது:-

*திரு-கொச்சி போலீசாரின் அடக்குமுறை பற்றி எடுத்துச் சொல்லும் இந்த வெளியீட்டை, தோழர் நேசமணியும், பாராளுமன்ற உறுப்பினர் ரசாக்கும் தயாரித்துள்ளனர். இந்த வெளியீடு, டில்லியில் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே விநியோகிக்கப்படுகிறதாம்.*

*நாகபுரியில் பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியின் மாநாட்டிற்கும் இந்த வெளியீடுகள் அனுப்பப்படுகின்றனவாம்.*

பண்டித நேரு, திரு—கொச்சி போலீசாரின் கொடுமைகள் பற்றிய புகார்கள் பற்றி, திரு—கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணுவிடமிருந்து, அறிக்கை ஒன்றை சீக்கிரமே அனுப்புமாறு கேட்பார் என்று தெரிகிறது.

திரு—தமிழர்கள் மீது வீசப்பட்ட போலீஸ் அடக்குமுறை பற்றிய விபரங்களை, பட்டம் தாணுவிடமிருந்து, நேரு, கேட்டறிய இருக்கிறார் என்று தெரிகிறது.

போலீஸ் அடக்குமுறை பற்றி வெளியிடப்பட்டுள்ள வெளியீட்டில், "200 ஆண்டு சரித்திரத்தில் காணப்படாத கொடுமைகள் திரு—தமிழகத்தில் நடைபெற்றன," என்று கூறப்பட்டிருக்கிறதாம்.

## மேற்கு பாகிஸ்தான்

### அடுத்த மாதம் இணைப்பு

டாக்டர் கான்சாகிப் முதன்மந்திரி ஆகலாமென யூகம்!

*மேற்கு பாகிஸ்தானில் உள்ள நான்கு மாநிலங்களையும், 10-க்கு மேற்பட்ட சமஸ்தானங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே மாநிலமாக்கப்படும் என்று பாக். பிரதமர் முகம்மதலி அறிவித்திருந்தாரல்லவா? அதைத் தொடர்ந்து இணைப்புக்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்று செய்திகள் வெளிவருகின்றன.*

*இணைப்புத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றும் பொருட்டு, மந்திரிசபை கூடி ஆலோசனை நடத்தியதாம்.*

*பிரதம மந்திரி, நிதிமந்திரி, உள்நாட்டு மந்திரி ஆகியோரின் ஆலோசனைக் கூட்டமும், இணைப்புத் திட்டத்தை உருவாக்கிவரும் நிபுணர்களின் கூட்டமும் நடைபெற்றுள்ளதாம்.*

*டிசம்பர் முதல் தேதியை ஒட்டி, இணைப்புத் திட்டத்தின் இறுதி அமைப்பினை வெளியிட பாக். பிரதமர் விரும்புகிறாராம்.*

*இணைக்கப்படுகிற மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தின் முதன் மந்திரியாக டாக்டர் கான்சாகிப் வரக்கூடும் என அரசியல் வட்டாரங்கள் யூகிக்கின்றனவாம்.*

திரு-தமிழர் அறப்போர்:

## தோழர் வி. எம். ஜான் மீது வழக்கு

### குழித்துறை வழக்கில் 163 பேர் எதிரிகள்

*சர்க்கார் தரப்பில் 328 சாட்சிகள் விசாரணை*

**நாகர்கோவில், நவ. 20—**

**திருவாங்கூர்-தமிழர்களின் அறப்போர் வீரர்கள் மீது, திரு-கொச்சி போலீசார், குழித்துறையில் பதிவு செய்துள்ள வழக்கில் மொத்தம் 163 பேர் எதிரிகளாக உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.**

*சென்ற ஆகஸ்டு 11-ந் தேதியன்று திரு-தமிழக விடுதலை நாளன்று மார்த்தாண்டம், தொடுவட்டி, குழித்துறை ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காக இந்த வழக்கை திரு-கொச்சி போலீசார் தொடர்ந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.*

**இந்த வழக்கில் நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் வி. எம். ஜான், மற்றும் தி.த. நா.கா. தலைவர் பி. ராமசாமிப் பிள்ளை, குஞ்சன் நாடார், தாணுலிங்க நாடார், வில்லியம், ப. ஜீவானந்தம் ஆகியோரும் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.**

**குழித்துறையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் இந்த வழக்கில் தோழர் வி. எம். ஜான் 160வது எதிரியாக சேர்க்கப்பட்டிருக்கிறார்.**

**சர்க்கார் தரப்பில் 328 சாட்சிகள் விசாரணை செய்யப்படுவர் என்று தெரிகிறது.**

## பட்டம் தாணு காணும் கண்டனக் கணைகள்!

*மத்திய பாரத் மாநில மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் இங்கு நடைபெற்றபோது, திரு—கொச்சி மாநிலத்தில் ஆட்சி பீடத்திலிருக்கும் பி.-சோ. மந்திரி சபை, அங்கு நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தால் எழுந்துள்ள பிரச்சினை காரணமாக உடனே ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துள்ளது.*

*நிர்வாக வசதிகளைக்காட்டிலும், மக்களின் உயிரைத்தான் சோஷலிஸ்டுக் கட்சி அதிகமாக மதிக்கிறது என்றும் அத்தீர்மானத்தில் காணப்படுகிறது.*

## தொழிலாளர்மீது தடியடிப் பிரயோகம்

### விசாரணைக்கு உத்திரவு

**திருவனந்தபுரம், நவ. 23—**

**திருச்சூரிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள எல்லூர் மரத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக அவர்கள்மீது போலீசார் நடத்திய தடியடி தர்பார் குறித்து விசாரணை நடத்த திரு-கொச்சி சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர் எனத் தெரிகிறது.**

**இதுபற்றிய சர்க்கார் அறிக்கையில், அளவுக்கு அதிகமாக பலாத்காரம் உபயோகிக்கப்பட்டதாக புகார்கள் வந்ததின் பேரில் விசாரணை நடத்த உத்திரவிடப்படுவதாகக் காணப்படுகிறது.**

## இந்தியா-பாகிஸ்தான் பிரச்சினைகள்

### பேச்சுவார்த்தைகள் நடத்த புதிய தூதுக் குழு

*டாக்டர் கான்சாகிப் குழுவின் தலைவர்*

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு சகோதர நாடுகளிடையேயும் காஷ்மீர் பிரச்சினை பற்றியும், இன்னும் இதர பிரச்சினைகள் குறித்தும் இருந்துவரும் தகராறுகளை தீர்க்கும் பொருட்டு, பாகிஸ்தானின் புதிய மந்திரிசபை சங்கத்தினர்களின் தூதுக் குழு ஒன்று இந்தியா வரக்கூடுமென பாக். பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளனவாம்.

*இப்பிரச்சினைகள் குறித்து, பாக். பிரதமர் முகமது அலி பண்டித நேருவுடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வி கண்டன; ஆகையால், இம்முறை, தூதுக் குழுவில் அவர் இடம்பெற மாட்டாராம்.*

டாக்டர் கான்சாகிப் தலைவராகவும், இஸ்பஹானி, இஸ்கந்தர் மிர்ஜா ஆகிய இரு மந்திரிகள் அங்கத்தினர்களாகவும் தூதுக் குழுவில் பங்கு பெறுவராம்.

*இரு நாடுகளுக்குமிடையேயுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க புதிய பேச்சுவார்த்தைகள் வெகுவாகப் பயன்படும் எனவும், தாம் அம்முயற்சியைப் பாராட்டுவதாகவும், இந்தியாவிலிருக்கும் பாக். தூதுவர் கஜ்னபர் அலி தெரிவித்துள்ளாராம்.*

## இந்தோனேஷியாவிற்கு பாக். தூதுவர்

*கிழக்கு வங்கத்தின் கவர்னரான சௌத்திரி கலிக்குஜ்மான், இந்தோனேஷியாவில் பாகிஸ்தான் நாட்டு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

## நேரு — ராஜேந்திரர் சந்திப்பு

**புதுடில்லி, நவ 22—**

**பண்டிதநேரு, இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாதுடன், மத்திய மந்திரி சபையை திருத்தியமைப்பதுபற்றி கலந்து பேசினார் என்று தெரிகிறது.**

**பண்டிதபந்த் மத்திய மந்திரி சபையில் சேர்க்கப்படுவார் என்று தெரிகிறது.**

**இன்று காலை பாதுகாப்பிலாகா அமைச்சர் மகாவீர்தியாகி ஜனாதிபதியைக் கண்டு பேசினார். தியாகி பதவியிலிருந்து ஓய்வுபெற விரும்புகிறார் என்று தெரிகிறது.**

## ஒத்துழைக்க மாட்டோம்!

*ஆக்ரா, நவ. 23—*

*அகில இந்திய பாங்கி ஊழியர் சங்கத் தலைவர் திரு. காக்கர், தமது சங்கம் ராஜாத்யக்ஷா விசாரணைக் குழுவுடன் ஒத்துழைக்க இயலாதெனவும், வரும் டிசம்பர் 10-ந் தேதி முதல் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர அவர்களின் விமோசனத்திற்கு வேறு வழியில்லையெனவும் கூறியிருக்கிறார்.*

## காங்கிரஸ் தலைவர் ராஜிநாமா

### கருத்து வேறுபாடே காரணமாம்!

*எர்ணாகுளம் மாவட்ட காங்கிரஸ் தலைவர் டாக்டர் கே. மகாதேவன், தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது.*

*ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டிற்கு பிரதிநிதிகள் தேர்வில், பிராந்திய காங்கிரசுடன் தமக்கேற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே பதவியை விட்டு விலகுவதாகத் தெரிகிறது.*

## அணுசக்தி!

**அணுசக்தியை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்துவது பற்றிய மேற்கத்திய பிரரேபணையை ஐ. நா. சபையின் அரசியல் குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.**

**பெரும்பான்மை உறுப்பினர்களுடன் சேர்ந்து ரஷ்யாவும் வாக்களித்தது குறிப்பிடத்தக்கதாகும்.**

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—11—1954 புதன்


# வளரும் குழப்பம்!

“தனி நாடு பெறுவேன்; தாணி புகழ, அதை வளர்ப்பேன்,”

என்று முழங்கினார், பாகிஸ்தானின் அமைப்பாளர் ஜின்னா.

“எங்கள் இன மக்களுக்கென்று ஒரு நாடு தேவை; உயிர் கொடுத்தேனும் அதைப் பெறுவோம்; பெற்ற பின்னர், உலகம் வியக்க, எங்கள் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவோம்,”

என்றார், காலஞ்சென்ற லியாகத் அலிகான்.

“எங்களுக்குச் சுதந்திரத் திருநாடு வேண்டும்; இந்தியாவிலிருந்து பிரிந்து செல்வோம்; இன்ப வாழ்விற்குத் திட்டமிடுவோம்,”

என்று, பாகிஸ்தான் கோரியவர்கள், உலகறியச் சொன்னார்கள்.

அரசியல் உலகம் திகைத்துப் போயிற்று; ‘உண்மை’யில் நாட்டம் கொண்டவர்கள், மகிழ்ச்சியடைந்தனர்; ‘இனவாரி அரசு தேவை,’ என்று போரிடுவோர், பாராட்டினர்.

இந்திய உபகண்டத்திலிருந்து பிரிந்து, பாகிஸ்தான், தனி நாடாக, சுதந்திர நாடாக உருவாயிற்று.

பாகிஸ்தானை உருவாக்க உழைத்தவர்களில்முக்கியமானவர்களான ஜின்னா அவர்களும், லியாகத் அலிகான் அவர்களும் இப்போது உயிருடன் இல்லை; ஆனால், அவர்கள் உருவாக்கிய நாடு இருக்கிறது; அதை உலகம் பார்த்து வியந்து கொண்டே இருக்கிறது.

ஆம்; உலகம் பார்த்து வியக்கும் வகையில்தான், பாகிஸ்தானில் நிலவும் சூழ்நிலைகள் உள்ளன.

ஆதிபத்திய அமெரிக்கா, அங்கே, ‘உதவி தருகிறேன்,’ என்று உள்ளே நுழைந்து விட்டது.

‘பக்துனிஸ்தான்’ கோரிக்கைக்கு இணங்க, கராச்சி அரசியல்வாதிகளுக்கு மனமில்லை.

காஷ்மீர் பிரச்சினை தீரவில்லை.

‘நாட்டிலே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது,’ என்று கூறப்படுகிறது.

கிழக்கு வங்கத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபையையும், அதன் தலைவர் பஸ்லுல் ஹக்கையும் கராச்சி சர்க்கார் ‘டிஸ்மிஸ்’ செய்துவிட்டது.

இப்பொழுது, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையையும் கலைத்துவிட்டார்கள்.

முகமது அலியின் புதிய மந்திரி சபை மாற்றியமைக்கப் பட்டுவிட்டது.

இவ்வாறு குழப்பங்கள் நிறைந்து காணப்படும் பாகிஸ்தானில், நிர்ணயமானதோர் நிலைமையை எதிர்பார்க்க முடியவில்லை.

ஆனால், பாகிஸ்தானின் துவக்கக் காலம் முதல் இன்றுவரை அங்கே காணப்படும் மிகப் பெரிய பிரச்சினை, ‘வலிமை மிக்க மத்திய சர்க்கார் இருக்க வேண்டுமா, அல்லது வலிமை மிக்க மாகாணங்களைக் கொண்ட மத்திய கூட்டாட்சி இருக்க வேண்டுமா,’ என்பதுதான்.

நேற்றைறைக்கு முந்திய நாளன்று, ‘பாகிஸ்தான் மந்திரி சபை, பாகிஸ்தானை இரண்டே மாகாணங்களாகப் பிரித்து, வலிமை மிக்க மத்திய சர்க்காரை அமைக்க முடிவு செய்திருப்பதாக’ பிரதமர் முகமது அலி வானொலி மூலம் அறிவித்தார்.

கிழக்கு வங்கம், ‘கிழக்கு பாகிஸ்தான்,’ என்று, இனி அழைக்கப்படுமாம். மேற்கு பாகிஸ்தானில் உள்ள மாகாணங்களான சிந்து மாகாணம், மேற்கு பஞ்சாப், எல்லைப்புற மாகாணம் இவைகளை எல்லாம் ஒரே உறுப்பாக்கி, ‘மேற்கு பாகிஸ்தான்,’ என்று அழைக்கப்படுமாம்.

இனிமேல், பாகிஸ்தானில், சிறு அதிகாரங்கள் உடைய இரண்டு சட்ட சபைகளும், பெரும்பாலான அதிகாரங்களைக் கொண்ட மத்திய சட்ட சபை ஒன்றும் இருக்குமென்று முகமது அலியின் சொற்பொழிவிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

பாகிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டுவிட்டது.

இந்த நேரத்தில், இது போன்ற ஒரு முடிவைச் செய்ய முகமது அலியின் மந்திரி சபைக்குத் தகுதி உண்டா, அல்லது முகமது அலியின் மந்திரி சபை பாகிஸ்தான் மக்களின் உண்மையான பிரதிநிதியா என்ற பிரச்சினைகள் எல்லாம் எழத்தான் செய்கின்றன.

ஆனால், முகமது அலியோ, தனது சொற்பொழிவில், மேற்கு பாகிஸ்தானை ஒரே மாகாணமாக்குவதால், பஞ்சாபிகள், சிந்து மக்கள், பலுசிஸ்தானிகள், பட்டாணியர்கள் என்ற எண்ணங்கள் மறைந்துபோய், ‘பாகிஸ்தானியர்கள்’ என்ற எண்ணமே தலைதூக்கி நிற்குமென்று கூறுகிறார்.

‘மேற்கு பாகிஸ்தானை ஒரே மாகாணமாக்குவது கூடாது,’ என சிந்து அரசியல்வாதிகள் பலர் கிளர்ச்சி செய்கிறார்கள். இது பற்றி பொதுமக்களிடையே வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று ஒரு சாரார் கோருகின்றனர்.

‘எது எப்படியானாலும் எங்கள் கையில் பெரும்பாலான அதிகாரங்கள் தரப்பட வேண்டும்; வலிமை மிக்க மத்திய சர்க்கார் கூடாது,’ என்று கிழக்கு வங்க மக்களில் பலர் கோருகின்றனர்.

முகமது அலியின் பேச்சிலே பிடிவாதம் காணப்படுகிறது.

சில நாட்களுக்கு முன்னர், ‘முகமது அலி கைது செய்யப்படும் நிலைமை காணப்பட்டது,’ என்று செய்திகள் கூறின; ஆனால், இப்போது அவர், ‘மாகாண எல்லைக்கோடுகளை அழித்துவிட்டேன்,’ என்று பேசுகிறார்; அதிலே, ‘ஆணவம் தொனிக்கிறது,’ என்று சொன்னால் அது மிகையாகாது.

பாகிஸ்தான் மக்களின் பூரண ஆதரவு பெற்ற பாராளுமன்றம் இல்லாதபோது, பாகிஸ்தான் மந்திரிசபை செய்துள்ள இந்த முடிவிற்கு பாகிஸ்தான் மக்களிடையே பெரும்பான்மை ஆதரவு இருக்குமா என்பது சந்தேகமே!

அவர்கள் கேட்ட தனி நாடு துள்ளிக் குதிக்காவிட்டாலும், தளர் நடை போடாது வளரும் என்று பலர் எதிர்பார்த்தார்கள்; ஏழாண்டுகள் ஆகியும், பாகிஸ்தானுக்கென ஒரு தனி அரசியல் சட்டத்தை அவர்கள் இன்னும் தயார் செய்யவில்லை என்பது வருந்தத்தக்கதேயாகும்.

ஆண்டுகள் பலவாகியும், ‘கராச்சியில், பதவிச் சண்டைகள் தீர்ந்துவிட்டன,’ என்று இன்னமும் சொல்ல முடியவில்லை; தொல்லைகள் தொடர்கிறது; அரசியல் அமைதி ஏற்படவில்லை.

இப்போது முகமது அலியின் மந்திரி சபை செய்துள்ள இந்த முடிவின்மீது, அடுத்து பாகிஸ்தானில் தொடர்ந்து நடைபெறும் ‘நிகழ்ச்சிகள்’ தீர்ப்புக் கூறும் என எதிர்பார்க்கலாம். பாகிஸ்தானில் வளர்ந்துவரும் குழப்பத்திற்கு அவைகள்தான் தீர்ப்பளிக்க இயலும்!

## சர்க்கார் ஊழியர் சம்பள உயர்வு

### அரசாங்கம் கைவிரிப்பு

### நிதி நிலை சரியில்லையென நொண்டிச் சாக்கு!

சென்னை மாநில கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களின் சம்பளம், கிராக்கிப் படி முதலியவற்றை உயர்த்துவது சாத்தியமில்லையென மாநில அரசாங்கம் கைவிரித்துள்ளது.

சர்க்கார் ஊழியர் சங்கத்தின் 32-வது மாநில மாநாட்டில் சம்பளம், அலவன்ஸ் முதலியவற்றை திருத்தி அமைக்குமாறு கோரி தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பப்பட்டது.

அதைப் பரிசீலித்த பின்னர், அரசாங்கம், சம்பள, அலவன்ஸ் உயர்வுக் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

ரூ. 400-க்குக் குறைவாக மாதச் சம்பளம் பெறும் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படுகிற விகிதப்படி கிராக்கிப் படி தருவதானால், ரூ. 2 கோடி அதிகம் செலவாகும் என்றும், அவ்வளவு பெரிய தொகையைத் தர மாநில அரசாங்கத்தின் நிதி நிலைமை இடந்தரவில்லை என்றும் சர்க்கார் கூறுகிறது.

ஆந்திரப் பிரிவினை ஏற்பட்டுள்ளதாலும், விற்பனை வரி வருமானத்தில் சரிவு ஏற்பட்டுள்ளதாலும் நிதி நிலைமை மோசமாகியுள்ளதாகவும் சர்க்கார் கூறியிருக்கிறது.

சம்பளம், அலவன்ஸ் பிரச்னையை விசாரிக்கக் குழு ஒன்று நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையை தற்சமயம் ஏற்றுக்கொள்ள இயலாது எனவும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் நடத்தை விதிகளை மாற்றுகிற உத்தேசமும் இல்லை என்றும் சர்க்கார் தெரிவித்துள்ளதாம்.

## நிராகரிப்பு!

பாகிஸ்தான் இராணுவத்தில் மேஜர்-ஜெனரலாயிருந்த அக்பர்கானுக்கு ‘பிந்தி சதி வழக்கில்’ தரப்பட்டுள்ள 12 ஆண்டு கடுங்காவல் தண்டனையை ரத்து செய்யக் கோரி தன்னிடம் தரப்பட்ட கருணை மனுவை, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

# இங்கிலாந்து தொழிற் - சங்கவாதிகளின் நிறவெறி

## வெள்ளையரல்லாத தொழிலாளரை மட்டந்தட்ட திட்டம்

## தொழிலாளர் வர்க்கத்தின் இன உணர்வு கசப்பாக வளருகிறதாம்

வெள்ளையரல்லாத இதர இனத் தொழிலாளர்களுக்கு, உத்தியோக உயர்வு, வேலைக்குப் பாதுகாப்பு, இதர வசதிகள் போன்றவை தரப்படக்கூடாது எனக்கோரும் திட்டம் ஒன்றை பலத்தை கருத்து வேறுபாட்டிற்கிடையே இங்கிலாந்தின் பல்வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் சுமார் 100 பேர் கூடி விவாதிக்கவிருக்கின்றனராம்.

60,000 பேர் கொண்ட போக்குவரத்து, பொது தொழிலாளர் சங்கத்தின் எஞ்சினீயரிங் பிரிவு அமைப்புத் தலைவரான ஜிம் லிஸ்க் என்பவர் 4 அம்சங்களடங்கிய திட்டமொன்றை உருவாக்கியுள்ளார்.

அத்திட்டம்தான் இப்போது, 80 இலட்சம் தொழிலாளர்களுக்கான தொழிற் சங்கத்தின் பிராந்திய ஆலோசனைக் குழுவின் முன் விவாதிக்கப்படவிருக்கிறது.

லிஸ்க் தயாரித்துள்ள அத்திட்டங்களாவன :—

1. வெள்ளை தொழிலாளர்களை மேற்பார்க்கும் உத்தியோகங்கள் வேறு இனத் தொழிலாளருக்குத் தரப்படக்கூடாது.
2. வெள்ளை இனத்தில் தொழிலாளர்கள் கிடைத்தால் அவர்களையே வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும். வெள்ளை இனத் தொழிலாளர்கள் கிடைக்கும்போது இதர இனத் தொழிலாளர்களுக்கு வேலை தரக்கூடாது.
3. வேறு இனத் தொழிலாளர்களை எந்த வேலைக்கு அமர்த்திக் கொள்வதானாலும், தொழிற் சங்கத்தினருடன் நிர்வாகிகள் ஆலோசனை நடத்த வேண்டும்.
4. வேலையிலிருந்து நீக்கும்போது, முதலில் பலியாக வேண்டியவர்கள் வெள்ளை இனத்தவரல்லாதவர்கள்தான்.

வேறு பலவற்றுடன் இந்த நான்கு பிரதான அம்சங்களைக் கொண்ட தனது திட்டத்தை பிராந்திய தொழிற்சங்க ஆலோசனைக்குழு ஏற்றுக்கொண்டு ஆதரிக்குமென தான் நம்புவதாக லிஸ்க் தெரிவித்திருக்கிறார்.

இம்மாதிரித் திட்டம் ஒன்று உருவானதற்குக் காரணம் ஜமைக்காவைச் சேர்ந்த வெள்ளையரல்லாத தொழிலாளர்கள் இங்கிலாந்தில் ஏராளமாக வேலைக்கு அமர்த்தப்படுவதே என்று கூறப்படுகிறது.

வெள்ளையரல்லாதஅந்த தொழிலாளர்களுடன் ஒன்று சேர்ந்து தாங்கள் வேலை செய்ய முடியாதென வெள்ளை இனத்தைச் சேர்ந்த பஸ் கண்டக்டர்கள், டிரைவர்கள், மின்சாரத் தொழிலாளர்கள் பலர் கூறிவிட்டிருக்கின்றனர். அவர்கள் பஸ் வேலை செய்ய மறுத்துவிட்ட சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்கின்றனவாம்.

தனது திட்டம் பற்றி, லிஸ்க் கூறியிருப்பதாவது :—

“இந்தத் திட்டத்தைக் கொண்டு நாம் நிறவெறி கொண்டிருப்பதாகச் சிலர் கூக்குரல் எழுப்பலாம். ஆனால் பிரச்னை மிகக் கடினமான ஒன்று; தமது தொழிலில் நீண்ட காலமாக ஈடுபட்டிருப்பவர்களும், பிரிட்டனை சொந்த நாடாகக் கொண்டவர்களுமான வெள்ளையர்களுக்குத்தான் நமது முதல் அனுதாபம் இருக்க வேண்டும்.

இங்கு நிற பேதம் இருக்க வேண்டுமென யாரும் விரும்பவில்லை; ஆனால், ஒரு வெள்ளையரல்லாத தொழிலாளியின் மேற்பார்வையின் கீழ் ஐந்து வெள்ளை இனத் தொழிலாளர்கள் வேலையிலமர்த்தப்பட்டால், மிகக் கசப்பான இன உணர்வு தோன்றும்.”

## திபேத் நாட்டுக்கு சீனாவிலிருந்து சாலை

### 1000 மைல் அமைந்துவிட்டது

சீனாவிலிருந்து திபேத் நாட்டிற்கு அமைக்கப்படுகிற மூன்று பெரியசாலைகளில் முதலாவதான சாலை சுமார் 1000 மைல்கள் போடப்பட்டுவிட்டது. இன்னும் 180 மைல்களே போடவேண்டியுள்ளது. இதுவரை அமைக்கப்பட்டுள்ள பாதை திபேத் எல்லையைத் தொட்டுவிட்டது. இப்புதிய பாதை, பழைய பாதைகளுக்குப் பதிலாக அமையும்.

1180 மைல் நீளமுள்ள அந்தச் சாலை முழுதும் அமைக்கப்பட்டுவிட்டால், திபேத்தின் தலைநகர் லாசா, சீனாவிலுள்ள ‘லாஞ்செள’ எனும் இடத்துடன்தொடர்புடையதாகி விடும்.

ஏற்கனவே அமைந்துள்ள 1,000 மைல் சாலையும் போக்குவரத்து உபயோகத்துக்குத் தரப்பட்டுவிட்டது.

புதிய சாலை, திபேத் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்துள்ளதாம்.

## ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு

### தாய்லாந்து கலந்துகொள்ளாது?

ஜகர்தாவில் அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் நடைபெறுவதாயிருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தோனேஷியா அனுப்பிய அழைப்பை நிராகரிப்பதென தாய்லாந்து மந்திரி சபை முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. என்றாலும் இதுபற்றி இன்னும் எவ்வித அதிகாரபூர்வமான அறிவிப்பும் வெளிவரவில்லை எனவும் அறியக் கிடக்கிறது.

## அலகாபாத் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

உத்திர பிரதேச அட்வகேட்-ஜெனரல் வீட்டின் முன்பு அலகபாத் மாணவர்கள் திரளாகக் கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாநில சட்டசபையில் கொண்டு வரப்பட்ட அலகாபாத் பல்கலைக் கழக திருத்த மசோதாவை எதிர்க்குமுகத்தான் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர் எனத் தெரிகிறது.

திரு. மிஸ்ரா என்ற அதிகாரி வீட்டின் முன் மாணவர்கள், அந்த மசோதாவைத் திரும்பப் பெற வேண்டுமெனக் கோரி ஒலி முழக்கம் செய்தனராம்.

## மீண்டும் சேர்த்துக் கொண்டனர்!

பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதன் மந்திரியான டாக்டர் கோபி சந்த் பர்க்காவா என்பவரும், இன்னும் நால்வரும், 4 ஆண்டுகளுக்கு முன்பு கட்சியிலிருந்து காங்கிரஸ் தலைமை பீடத்தால் விலக்கிவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இப்போது மீண்டும் காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் எனத் தெரிகிறது.

பஞ்சாப் மாநில காங்கிரஸ் செயற்குழு, அந்த ஐவரையும் மீண்டும் காங்கிரசில் சேர்த்துக்கொள்வதென்ற முடிவுக்கு வந்துள்ளதாம்,

# மக்கள் சோஷலிஸ்டு கட்சி மாநாடு

## பிளவுகளுக்குப் பாலம் அமைக்க நரேந்திர தேவ் முயற்சி

### டாக்டர் லோகியாவின் கண்டனக் குரல் வலுக்கிறது?

நாகபுரி, நவ. 22—

மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் மாநாடு, இவ்வாரத்தில், நாகபுரியில் நடைபெற இருக்கிறது.

இந்த மாநாட்டில் கட்சிக்குள் இன்று நிலவும் கருத்து வேறுபாடுகள் நீங்கி, சுமூகமானதொரு நிலை வளருமா அல்லது ஒரு பெரும் பிளவே வெடிக்குமா என்பது முடிவாகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று மாலை அதிகாரப்பற்றற்ற முறையில், மத்திய செயற்குழு அங்கத்தினர்கள் கூடி விவாதித்தனர்.

நாளை அதிகாரபூர்வமான கூட்டம் நடைபெறும்.

ஆச்சாரிய நரேந்திர தேவ், ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் அண்மையில், பிரச்சினைகள் பல குறித்து விவாதித்துவிட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது.

அவரது கருத்துக்களுக்கு நல்ல வரவேற்பிருக்கலாம்.

கட்சிக்குள் எழுந்துள்ள கருத்து வேறுபாட்டிற்குக் காரணமெல்லாம், திரு-கொச்சியில் ம. சோ. கட்சியின் சார்பில், ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் பட்டம் தாணு பிள்ளையின் போக்குத்தான் என்பது வெளிப்படை.

கட்சியின் பொதுச் செயலாளரான டாக்டர் லோகியா, கடந்த ஆக. 11-ல் திரு-தமிழகத்தில் பட்டம் சர்க்கார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து, பட்டம் மந்திரி சபை ராஜினாமாச் செய்ய வேண்டுமெனக் கோரினார்.

ஆனால் கட்சித் தலைவரான ஆச்சாரிய கிருபளானி அதற்குச் சம்மதிக்கவில்லை துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை நடைபெறுவதால் அதன் முடிவு தெரியுமுன் மந்திரி சபை ராஜினாமாச் செய்யக்கூடாது எனக் கருதினார்.

விளைவு, பொதுச் செயலாளரான டாக்டர் லோகியா, தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

டாக்டர் லோகியாவும் அவரைப் பின்பற்றுபவர்களும், ம. சோ. கட்சியின் தலைமைப் பீடத்தை பகிரங்கமாகவே கண்டித்து வருகின்றனர்.

ம. சோ. கட்சி உருக்குலைந்து போகுமோ என அஞ்சும் வகையில் அவர்கள் எதிர்ப்பு இருந்து வருகிறது.

மேலும் டாக்டர் லோகியா கோஷ்டி, செயற்குழுவில் தங்கள் கோரிக்கை செவி சாய்க்கப்படாவிடின், மாநாட்டில் கண்டனத் தீர்மானம் கொண்டு வரவும் தயாராகிவிட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

அசோக் மேத்தா பத்திரிகையாளரிடம் பேசுகையில், "கட்சிப் பூசல்கள் நாகபுரி மாநாட்டில் ஒழிந்துவிடும் ; எத்தனை நாளைக்குத்தான் ஒரு கட்சி இப்படிப் பல கருத்து வேறுபாடுகளுடன் இயங்கிக் கொண்டிருக்க முடியும்?" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆச்சாரிய நரேந்திர தேவின் தலையீடு, வரவேற்கப்படுகிறது என்றாலும், முடிவு, இன்னமும் தெளிவில்லாததாகவே தோன்றுகிறது.

★

## திரு-கொச்சி ம.சோ.கட்சியின் கருத்து

திருவனந்தபுரம், நவ. 22—

"நாகபுரியில் நடைபெறும் கட்சி மாநாட்டில், பிரதான பிரச்சினையாக விவாதிக்கப்பட இருக்கும் திரு-கொச்சி மந்திரி சபை குறித்து மாநாட்டில் எவ்விதக் கருத்தையும்வெளியிடுவதில்லை," என்று திரு-கொச்சி ம. சோ. கட்சியின் செயற்குழு முடிவு செய்துள்ளதாம்.

மாநாட்டில், திரு—கொச்சியிலிருந்து 17 பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என்றும், அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல முழுச் சுதந்திரம் தரப்பட்டிருப்பதாகவும் செயற்குழுக் கூட்டத்திற்குப் பின் பத்திரிகையாளரிடம் பேசுகையில், பொதுச் செயலாளரான பி. சி. வர்கீஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

"ம. சோ. கட்சியின் செயற்குழுவைப் பொறுத்த மட்டில், திரு—கொச்சியில் கூட்டு மந்திரி சபை அமைப்பது என்பது சாத்தியமானதல்ல ; – இதனால் காங்கிரசின் ஆதரவு கிடைத்தாலும் சரி, இல்லாதுபோனாலும் சரி! கேரள சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் அடங்கிய கூட்டு முன்னணியுடன் சேர்ந்து மந்திரி சபை அமைப்பதையும், ம. சோ. கட்சி எதிர்க்கிறது," என்று, அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒல்லூரில் நடைபெற்ற போலீஸ் தடியடி பற்றி விசாரிக்கக் கோரியுள்ளதுடன், மாநிலத்தில் போலீசாரின் மிதமிஞ்சிய நடவடிக்கைகளிம், பொது ஜனத் தொடர்பு இலாக்காவும், ம. சோ. கட்சியின் பலத்த கண்டனத்திற்கு ஆளாயினவென்றும் அவர் தெரிவித்தார்.

## நெல்லையில் சர்வ கட்சிக் கூட்டம்

19—11—54 இரவு 7 மணிக்கு திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் கட்டிடத்தில் நடந்த சர்வ கட்சி கூட்டத்தில், திரு-தமிழக மக்கள் நடத்திய அறப்போர் மீது, திரு-கொச்சி மாநில சர்க்கார் நடத்தி வரும் கொடிய அடக்குமுறையைக் கண்டித்தும், திரு-தமிழர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்றும், பிடி வாரண்டுகளை ரத்து செய்ய வேண்டுமெனவும், சிறையில் வாடும் தமிழர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும், திரு-தமிழகப் பகுதியில் இன்றும் நடைபெறும் போலீசின் அடக்குமுறை நிறுத்தப்பட்டு அமைதியான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டுமெனவுக், ஆகஸ்டு 11-ந் தேதி நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி விசாரிக்க திரு-கொச்சி சர்க்கார் அமைத்துள்ள ஒரு நபர் விசாரணை கலைக்கப்பட்டு, சர்க்கார் சார்பற்ற விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மொழிவழி மாநில அமைப்புக் குழு தனது சிபாரிசுகளை வெளியிடுமுன், திரு-கொச்சி சர்க்கார் அவசர அவசரமாக, தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் நடத்தி வரும் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

## மலையம்பாளையம் உழவர் சங்கம்

6—11—54 பகல் 11 மணிக்கு மலையம்பாளையம் பூதாச்சிக் கவுண்டர் இல்லத்தில், சூரப்பள்ளி, ஆவடத்தூர், தோரமங்கலம், இருப்பாளி ஆகிய கிராம உழவர்கள் கூடி, 'உழவர் சங்க'மொன்று அமைத்து, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர் : சூ சி. கந்தசாமி ; துணைத் தலைவர் : ரா. காளியப்பன் ; செயலாளர் : க. பூதாச்சிக் கவுண்டர் ; துணைச் செயலாளர் : ஆ. பொன்னுசாமி ; பொருளாளர் : தானப்ப கவுண்டர். பின்னர், இத்திங்கள் இறுதிக்குள் உழவர் கட்சித் தலைவர்களைக் கொண்டு, சங்கத்தின் துவக்கவிழாவை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## தெற்கு பொய்கைநல்லூர் பஞ்சாயத்து தேர்தல்

### கழகத் தோழர்கள் வெற்றி

18—11—54-ல் நடைபெற்ற பஞ்சாயத்துக் குழு தேர்தலில், தி. மு. கழகத் தோழர்களான ச. சோ. வடிவேலு, க. கோவிந்தசாமி, ப. கோவிந்தசாமி ஆகியோர் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றனர்.

## சென்னை மாகாண மீனவர் ஐக்கிய முன்னணி

மேற்கண்ட முன்னணியின் தலைவர் தோழர் என். ஜீவரத்தினம் 21-11-54 மாலை 5½ மணிக்கு டில்லியிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். மீனவர்கள் அவரை சென்ட்ரல் ஸ்டேஷனில் வரவேற்று, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இராயபுரம் புதுமனைக்குப்பம் மைதானத்தில் சுமார் 7 மணிக்கு பொதுக் கூட்டம் நடந்தது. தோழர் கே. குப்புராஜ் தலைமை வகித்தார். தோழர்கள் கே. நடேச நாட்டார், நாமதேவ், பி. கே. வேணுகோபால், நெடுஞ்செழியன், எம். என். நாதன் மற்றும் பலர் பேசினார்கள். தோழர் என். ஜீவரத்தினம், தான் டில்லியில் மீனவ மக்களின் முன்னேற்றத்திற்காவும், மீன் பிடிக்கும் தொழில் வளர்ச்சிக்காவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும், முக்கியமான பார்லிமெண்ட் உறுப்பினர்களோடும் நடத்திய பேச்சு, வார்த்தைகளை விளக்கினார். சென்னை சட்ட சபை கூடுமுன் சட்ட மெம்பர்களைக் கண்டு பேச வேண்டும் என்றும் கூறினார்.

## தமிழாசிரியர் கழகம் நிறுவனம்

வாலாசாபாத், நவ. 22—

சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகச் சார்பில் நேற்று மாலை இந்து மத பாடசாலையில் கூட்டப்பட்ட கூட்டத்தில், செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகம் அமைக்கப்பட்டது. மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பெருவாரியான பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர். திரு. மயிலை—சிவ. முத்து தலைமை தாங்கி, கழகம் அமைக்கப்பட வேண்டிய இன்றியமையாமை பற்றிப் பேசினார். திரு. மே. வீ. வேணுகோபாலனைத் தலைவராகவும், தோழர்கள் வே. இராமலிங்கம், செ. சாம்பசிவம், மா. வேதாசலம் ஆகியவர்களைத் துணைத் தலைவர்களாகவும், தா. அழகுவேலன், எஸ். வி. இராமகிருஷ்ணன் ஆகியவர்களைச் செயலாளராகவும் கொண்ட ஆட்சிச் செயற் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

வாலாசாபாத் இந்து மத பாடசாலை அதிபர் திரு. மாசிலாமணியார் வந்திருந்த தமிழாசிரியர்களை வரவேற்று, இடந் தந்து விருந்தோம்பி உபசரித்தமைக்கு, கழகச் சார்பில்நன்றிதெரிவிக்கப்பட்டது.

## திரு. வி. க. ஆரம்பப் பாடசாலை

திருச்சி மாவட்டம் குளித்தலை தாலுகாவைச் சேர்ந்த மஜரா பணிக்கம்பட்டியில், மருதூர் பஞ்சாயத்துக் குழு தலைவர் பி. போலம ரெட்டி நிர்வாகத்தின்கீழ் நடைபெற்றுவரும் திரு. வி. க. ஆரம்பப் பாடசாலைக்கான புதிய கட்டிடத்தை, திரு. டி. எம். நாராயண மாறார் தலைமையில், திரு. எம். ஆர். ரங்கராஜுலு திறந்து வைத்தார். திரு. டி. கே. சீனுவாசன் அவர்கள் திரு. வி. க. உருவப் படத்தைத் திறந்து வைத்து, கிராமக் கல்வி வளர்ச்சியின் அவசியம் குறித்தும், திரு. வி. க. அவர்களின் தமிழ்த் தொண்டு குறித்தும், திரு. வி. க. அவர்களின் உருவப் படத்தை அன்பளிப்பாக வரைந்து உதவிய ஆசிரியர் இராமலிங்கம் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் பேசினார். தலைவர் தமது முடிவுரையில் கல்வி வளர்ச்சிக்காக அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

## நினைவு கால்பந்தாட்டப் போட்டி

தூத்துக்குடி வ. பு. அ. சௌந்திரபாண்டியன் கால்பந்தாட்டக் கழகத்தார், மறைந்த மாவீரர்கள் பட்டிவீரன்பட்டி வ. பு. அ. சௌந்திரபாண்டியன், தூத்துக்குடி நகர சபைத் தலைவர் வி. வி. தனுஷ்கோடி ஆகியோரின் முதலாண்டு நினைவாக, டிசம்பர் திங்கள் இறுதியில், தூத்துக்குடி வ. உ. சி. தருவை மைதானத்தில் ஒன்பது பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டியொன்றை நடத்துவர். போட்டியில் வெற்றிபெறும் கழகத் தோழர்கட்கு உயர்ந்த முறையில் பரிசுகள் வழங்கப் பெறும். நகர கால்பந்தாட்டக் கழகங்கள் அவசியம் பங்கு பெற்றுக் கொள்ள வேண்டுமென்று மேற்படி கழகத்தார் கேட்டுக்கொள்கின்றனர்.

## விருதை ந. இராமசாமிக்கு விருந்துபசாரம்

14—11—54 மாலை 5 மணிக்கு, பம்பாய் — தாராவி, சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றச் சார்பில், 'அன்பகத்'தில், தோழர் சா தர்மராசன் தலைமையில், தோழர் விருதை ந. இராமசாமிக்கு ஒரு விருந்தளிக்கப்பட்டது. அனைவரையும் வரவேற்று தோழர் குறள்தாசன் பேசிய பின், தோழர் ந இராமசாமி அவர்கள், தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்து விட்டுப் பேசுகையில், மறைந்த மாவீரன் பாண்டியன் பேரால் அம்மன்றம் அங்கு அமைக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி கொள்வதாகக் கூறினார்.

## பிரிவுபசாரம்

20—11—54 பிற்பகல் 3½ மணியளவில், சின்ன சேலம் ஆசிரியர் கழகச் சார்பில், மாறுதலாகிச்செல்லும் பள்ளி கண்காணிப்பாளரான திரு. கா. சுப்ரமணியம் அவர்கட்கு பிரிவு உபசாரமும், புதிதாய் பதவியேற்ற திரு. கே. ரமணன் அவர்கட்கு வரவேற்பும் அளிக்கப்பட்டது. தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்.

## 'மாயூரம் வேதநாயகம்' வாசகசாலை திறப்புவிழா

14—11—54 மாலை 4 மணிக்கு, கூறைநாடு வாத்துக்கார தெருவில் உள்ள டி. இ. எல். சி. பாடசாலையில், திரு. ரெத்தினசாமி தலைமையில் மேற்படி வாசகசாலை துவக்க விழா நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். பின்னர், 'வாத்துக்காரத் தெரு'வை, 'வேதநாயகம் பிள்ளை தெரு' என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கோரி தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

## காஞ்சியில் தி.மா.மு. கழகத் துவக்கம்

7—11—54 அன்று காஞ்சி பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள், தோழர் இராம. அரங்கண்ணல் அவர்கள் தலைமையில், "திராவிட நாடு" நிலையத்தில் கூடி, திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் அமைத்து கழக நிர்வாகிகளையும் தேர்ந்தெடுத்தனர்: செயலாளர்: து. வேலர்; துணைச் செயலாளர்கள்: கு. அப்பாவு, ஆ. ப. சிவம்; பொருளாளர்: பெருமாள். விரைவில் கழகத் துவக்க விழாவை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## மதுரை குமாரவேல் மன்றம்

14—11—54-ல், திரு. க. சக்கரை தலைமையில், மேற்படி மன்றத்தின் இவ்வாண்டு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது :— செயலாளர் : மு. நல்லமாயன் ; துணைச் செயலாளர்கள்: க. சக்கரை, அ. பெஞ்சிமின்; பொருளாளர்: இராசு; ஆலோசனைக் குழுவினர்: பிச்சை, புதுராசா, மு. குருபாதம், நாராயணன், செல்லையா. பின்னர் தோழர் செ. சொ. மா. இராசன் பேசினார்.

## திராவிடர் சொற்பயிற்சி மன்றம்

6—11—54ல், பரவை தி. மு. கழகச் சார்பில் மேற்படி மன்றம் ஆரம்பித்துவைக்கப்பட்டு, மன்றத்தின் நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: சி. அருணாசலம்; துணைச் செயலாளர்: கா. இராசாமணி; விளம்பர உறுப்பினர்: அ. கார்மேகம்.

## திருப்பத்தூர் (வ. ஆ.) பகுத்தறிவு மன்றம்

7—11—54-ல் நடைபெற்ற மேற்படி மன்றத்தின் செயற்குழுக் கூட்டத்தில் தேசிகவினாயகம், தாதுலிங்கனார், கித்வாய், காடி முத்து ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மன்ற வளர்ச்சி நிதிக்காக ஆவன செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

## வீரவநல்லூர் மறுமலர்ச்சி மன்றம்

மன்றத்தின் உறுப்பினர்கூட்டம் 17-11-54ல் நடைபெற்றபோது, புதிய செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: கே. கோவிந்தராசன்; துணைத்தலைவர்: கு. இசக்கி; செயலாளர்: ப. சுப்பையா; துணைச் செயலாளர்: ஏ. நாராயணன்; பொருளாளர்: ஓ. இசக்கி; செயற்குழு உறுப்பினர்கள்: சி. இராமையா, வி. எஸ். பாண்டியன், ஏ. ராசப்பன், ஏ. கணபதி, ந. பட்டமுத்து, சண்முகசுந்தரம், கே. அருணாசலம், சோமு, டி. கே. எஸ். குமார், பி. சுப்பையா. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## தாழ்த்தப்பட்டோர் சம்மேளன பொதுக் கூட்டம்

சென்னை ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் சார்பில் 21—11—54 மாலை 6 மணிக்கு தோழர் மு. சுந்தராஜ் எம். சி. தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருவாரூர் ஆ. ரத்தினம் எம். எல். ஏ., 18-வது வட்ட தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் கிளை ஸ்தாபனத்தைத் திறந்து வைத்து, ஆட்சியாளரின் ஐந்தாண்டு திட்டத்தில், ஆதிதிராவிட பெருங்குடி மக்களுக்கு ஒரு வித நன்மையும் செய்யவில்லை என்று குறிப்பிட்டார். தோழர்கள் எம். ஜே. வேலு, எம். ஆர். பச்சையப்பன், மாணிக்கவாசகம் எம். சி. ஆகியோர் பேசினர்.

## முகவரி

தூத்துக்குடித் தோழர் எஸ். நடராசனுக்கு கடிதம் எழுதுவோர் இந்த முகவரிக்கு எழுதுக :—

எஸ். நடராசன்,
நகர சபை உறுப்பினர்,
கான்வெண்ட் ரோடு,
தூத்துக்குடி.

## திருமணம்

7—11—54ல், வேப்பலோடை தி. மு. கழகச் செயலாளர் வி. பி. முத்து அவர்கள் தலைமையில் தோழர் சண்முகக்கனி—தோழியர் பொன்னம்மாள் திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர் ஆர். ராமலுங்கம் சொற்பொழிவாற்றினார். மணமகனால் அவ்வூர் தி. மு. கழகத்திற்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* * *

29—10—54 காலை 7 மணிக்கு, தூத்துக்குடி, வடக்கூரைச் சேர்ந்த தோழர் எஸ். ஓ. வெற்றிவேல் அவர்களது மகள் தோழியர் ஜெயகாந்தம்—எஸ். குமாரசுந்தரம் பதிவுத் திருமணம், தோழர் எம். எஸ். இராமசாமி முன்னிலையில் மாவட்ட ஆவணப் பதிவாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. திருமண நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம் — மிக்க நன்றி—பொறுப்பாளர்.

# விஷின்ஸ்கியின் சடலம்

## மாஸ்கோவில் அடக்கம்

ஐ. நா. சபையில் ரஷ்யப் பிரதிநிதிக் குழுவின் தலைவராயிருந்த விஷின்ஸ்கி காலமானார் என்ற செய்தி, மாஸ்கோவை மிகுந்த வருத்தத்திற்காளாக்கியுள்ளது.

அவரது சடலம் நியூயார்க் நகரில் உள்ள ஐ. நா. அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஐ. நா. சபைப் பிரதிநிதிகளும், தூதுவர்களும் மட்டுமே சடலத்தைக் காண அனுமதிக்கப்படுகின்றனர்.

அவரது சடலம், விமான மூலம் மாஸ்கோ கொண்டு வரப்பட்டு, சகலவிதமான அரசாங்க மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படும் எனத் தெரிகிறது.

★

### ஐ. நா. வருத்தம்

ஐ. நா. சபையில் விஷின்ஸ்கியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பொதுச்சபைக் கூட்டமொன்று நடைபெற்றது.

பொதுச் சபைத் தலைவரான எவான் கிளபென்ஸ், மற்றும் எல்லா நாட்டுத் தூதுவர்களும், அமெரிக்கத் தூதுவர் உட்பட விஷின்ஸ்கியின் அரிய சேவையையும், அபாரத் திறமையையும், அன்பு உள்ளத்தையும், அடக்கமான பண்பையும், அருமையான ராஜதந்திரத்தையும் பாராட்டிப் பேசினர்.

ஐ. நா. சபையின் மிகப் பிரபல்யமானவரும், மிகச் சிறந்த அனுபவம் மிகுந்த ராஜதந்திரியுமானவரை ஐ நா. சபை இழந்துவிட்டதாகப் பேசப்பட்டது.

# விஷின்ஸ்கி பதவியில் ஜாகப் மாலிக்

ஐ. நா. சபையில் ரஷ்யாவின் பிரதிநிதிக் குழுவின் தலைவராக இருந்து காலஞ்சென்ற விஷன்ஸ்கியின் இடத்தில், இப்போது பிரிட்டனில் ரஷ்யத் தூதுவராக இருக்கும் ஜாகப் மாலிக் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஜாகப் மாலிக் ஏற்கனவே ஐ. நா. சபையில் ரஷ்யப் பிரதிநிதிக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றி அனுபவம் பெற்றவர் தான்.

புதிய பதவியை மேற்கொள்ள மாலிக் லண்டனிலிருந்து நியூயார்க் பயணமாகிவிட்டதாகவும் தெரிகிறது.

# பிரிட்டனில் உள்ள அமெரிக்க துருப்புகள்

## வெளியேறவேண்டும் என கோரிக்கை

பிரிட்டனில் உள்ள அமெரிக்கப் படைகளை வாபஸ் பெற வேண்டுமென்று பிரிட்டிஷ் கூட்டுறவு கட்சி லண்டன் கிளையின் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

உலக விவகாரங்களில், சமீப கால அபிவிருத்திகளில், உலகத்தில் நிலையான சமாதானம் நிலவுவதற்கான முயற்சிகளில் பிரிட்டனுக்கும் — அமெரிக்காவுக்கும் இடையே அடிப்படை வேற்றுமைகள் இருப்பது பற்றி அத்தீர்மானம் மேலும் கூறியுள்ளது.

"பிரிட்டனில் அமெரிக்கத் துருப்புகள் தொடர்ந்து இருப்பது, காமன்வெல்த் நாடுகள் உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்ப்பாக அமைந்திருக்கிறது" என்று அத்தீர்மானம் மேலும் கூறுகிறது.

சீனாவில் தற்போது ஆட்சியில் உள்ள சர்க்காரை ஐக்கிய நாடுகள் சபையில் அனுமதிக்க வேண்டுமென்றும், முதல் நடவடிக்கையாக கலாச்சாரத் துறையிலும், வர்த்தகத் துறையிலும், அபிவிருத்தி காண்பதற்கான நடவடிக்கைகளைத் துவங்க வேண்டுமென்றும் மேற்படி மாநாட்டில் இன்னுமொரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

# சேரி ஒழிப்பு

## நிலங்களுக்கு நஷ்டஈடு இல்லை

கிராமங்களிலும், நகரங்களிலும், சேரி ஒழிப்புக்காக எடுத்துக்கொள்ளப்படும் நிலங்களுக்கும், வீடுகளுக்கும், நிலச்சுவான்தார்கள் நஷ்டஈடு கோருவது ஆட்சேபனைக் குரியது என்றும், அவர்களுக்கு எவ்வித நஷ்டஈடும் கிடையாதெனவும், மாநில சர்க்கார்களுக்கு இந்தியப் பிரதமர் நேரு கடிதம் எழுதியுள்ளார் என்ற தகவலை ஐதராபாத் ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் கோபால் ராவ் வெளியிட்டுள்ளார் எனத் தெரிகிறது.

இதையொட்டி தனி நபரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும் சொத்துக்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது பற்றிய அரசியல் சட்டத்தின் 31-வது பிரிவை மத்திய சர்க்கார் திருத்தியமைக்கும் என்றும் அந்த மந்திரியார் கூறினாராம்.

# ஆந்திர தேர்தல்

## பிரஜா கட்சியின் நிலைகுறித்து தென்னெட்டி விஸ்வநாதம்

"ஆந்திர சட்டசபைத் தேர்தலின்போதும், அதன் பின்னும், காங்கிரஸ் கட்சியுடன் பிரஜா கட்சி ஒத்துழைப்பது பற்றி இறுதியாக இன்னும் எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை,"

என்று, பிரஜா கட்சித் தலைவர் தென்னெட்டி விஸ்வநாதம் கூறியிருக்கிறார்.

"காங்கிரஸ், இன்னும் இதர ஜனநாயக் கட்சிகளுடன் ஒத்துழைப்பது பற்றி முடிவெடுக்க, பிரஜா கட்சியின் நிர்வாகக் குழுவும், தலைவரால் நியமிக்கப்படும் இணைப்பு அங்கத்தினர்களும் வரும் நவம்பர் 29-ல் ராஜமகேந்திரபுரத்தில் கூடி விவாதித்து முடிவு எடுப்பர்," என்றும் திரு. விஸ்வநாதம் தெரிவித்துள்ளார்.

ஆந்திர பிரஜா கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது, கட்சிச் செயலாளர், "காங்கிரசிலிருந்து, 1947-ல், விலகுவதற்கான காரணங்களாயிருந்த நிலைகள் இன்னும் நிலவுகின்றன; அவை மறைந்து விடவில்லை; எனவே, காங்கிரசுடன் சேர்ந்துவிடுவது சாத்தியமில்லை" என்று தெரிவித்தாராம்!

# சென்னை மேயராக எம்.ஏ.சிதம்பரம் தேர்வு

சென்னை நகரசபைக் கூட்டத்தில் இந்த ஆண்டிற்கு மேயராக திரு. எம். ஏ. சிதம்பரம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உதவி மேயராக திரு. எஸ். கோவிந்தசாமி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இருவரும் காங்கிரஸ்காரர்களே.

புதிய மேயரான திரு. எம். ஏ. சிதம்பரம், செட்டிநாடு ராஜாவின் சகோதரராவார். காலஞ் சென்ற ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரின் மூன்றுவது செல்வருங்கூட.

# ம. சோஷலிஸ்டு கட்சி எம்.எல்.ஏ. தலைமறைவு

## கொலைவழக்கில் ஈடுபாடு?

ஐதராபாத் சட்டசபையில், மக்கள் சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினரான ஜி. கங்காரெட்டி என்பவரைக் கைது செய்ய போலீசார் முயற்சி செய்துகொண்டிருக்கின்றனராம்.

இதையறிந்த எம். எல். ஏ., தலைமறைவாகிவிட்டாராம்.

தானி எனும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு கிழவி கொலை செய்யப்பட்டதையொட்டி போலீசார் அவரைத் தேடுகிறார்களாம்.

அவரைக் கைது செய்வதற்கான 'வாரண்ட்' ஒன்றும் நிக்மல் நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

# சர்க்காரின் தவறான தொழிற் கொள்கை

## வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்க்கிறது

### ஐதராபாத் மஜ்தூர் சங்கக் கண்டனம்

ஐதராபாத், நவ. 23—

**"தொழிலாளர் பிரச்சினையில் ஐதராபாத் சர்க்கார் கடைபிடிக்கும் போக்கை எதிர்த்து சர்க்காரை நேர்மையான முறையில் நடக்கத் தூண்டும் பொருட்டு ஐதராபாத் முழுமையும், திட்டமிடப்பட்ட போராட்டம் ஒன்றை நடத்துவது அவசியமாகி விட்டது,"**

என்று, ஐதராபாத் மஜ்தூர் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

இந்த அமைப்பு, சோஷலிஸ்டுகளுடையதாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம், ஐதராபாத் முழுமையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆள் குறைப்பினாலும், தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுவிட்டதாலும், நிலைமை இன்னும் மோசமாகி விட்டதாம்.

ஐதராபாத் சர்க்காரின் தொழில் கொள்கை வேலையில்லாத் திண்டாட்டத்தை ஊக்குவிப்பதாக இருக்கிறதாம்.

ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான சர்க்கார் ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர் என்றும், இன்னும் ஆயிரக்கணக்கானவர்களை வெளியே அனுப்ப சர்க்கார் தயாராக இருக்கிறது என்றும், மஜ்தூர் சங்கத்தின் தீர்மானம் ஒன்று கருதுகிறது.

அத்தீர்மானம் மேலும் கூறுவதாவது :—

சர்க்காரின் தொழில் கொள்கை தொழிலாளர்களுக்கு உதவி செய்யாததுடன் மட்டுமின்றி, அவர்கள், தங்களுடைய வாழ்க்கைப் போராட்டத்திற்காக ஒழுங்கான அமைப்புகளுடன், அமைதியான முறையில் கிளர்ச்சி செய்யும் போது, போலீசாரின் அடக்கு முறைகள் மூலம் அக்கிளர்ச்சிகளையும் சர்க்கார் அடக்க முயற்சிக்கிறது.

# பிரச்சினைகளுக்குப் பரிகாரம்

## பீரங்கிகளால் கிடைக்காது

### டிட்டோ கூறுகிறார்

"யூகோஸ்லேவியா, வெளிநாட்டு விவகாரங்களில் சுதந்திரமானதொரு கொள்கையையே பின்பற்றும்; எவரையும் பகைத்துக் கொள்ளாது; கம்யூனிஸ்டுகளின் கோஷ்டியுடனோ, அன்றி முதலாளித்துவ நாடுகளின் கோஷ்டியுடனோ சேராது,"

என்று, ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

"இராணுவ அடிப்படையில் கூட்டாகச் சேர்ந்து கோஷ்டி அமைப்பதை நான் விரும்பவில்லை; பீரங்கிகளையும், அணுகுண்டுகளையும் காட்டி அச்சமூட்டி உலகப்பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணலாம் எனச் சிலர் எண்ணுகின்றனர்; அது தவறு,"

என்றும், டிட்டோ குறிப்பிட்டார்.

# உழைக்கும் பத்திரிகாசிரியர்கள்

## தொழிலாளர்களாகிறார்கள்!

புதுடில்லி, நவ. 23—

பத்திரிகை விசாரணைக் குழுவின் சிபார்சுகளின்படி, உழைக்கும் பத்திரிகாசிரியர்களை தொழிலாளர் தகராறு சட்டத்தின் கீழ் கொண்டுவர மத்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இச்செய்தியை அமைச்சர் கேஸ்கர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

# கோழைகள்!

இந்தூர், நவ. 22—

கலவரம் ஒன்றின்போது, கலகம் விளைவித்தவர்களை எதிர்த்து நின்று அடக்கத் துணிவின்றி கோழைத்தனமாக ஓடிவிட்ட ஒரு போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர், நான்கு போலீசார் ஆகியோரை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைத்து மத்திய பாரத் மாநில போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரல் உத்திரவு பிறப்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

கடந்த 19-ந் தேதியன்று 'பெட்மா' என்ற இடத்தில் உள்ள ஆயுதச்சாலையை ஆயுதந்தாங்கிய ஒரு கலகக் கூட்டத்தினர் தாக்கினர்; அதனால் 11 பேருக்குக் காயம் ஏற்பட்டதாம்.

கொள்ளையர்கள் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கிய நேரத்தில், அந்தப் போலீஸ் அதிகாரிகள் ஸ்டேஷனை விட்டே ஓடிவிட்டனராம்.

கொள்ளைக்காரரை ஒரே ஒரு போலீஸ்காரர் மட்டும் எதிர்த்துத் தாக்கினாராம். அவர் தாக்கப்பட்டதினால் காயமேற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறாராம்.

கொள்ளையர்கள் ஒரு வீட்டைக் கொள்ளையடித்து அங்கிருந்து பதினாயிரம் ரூபாய் பெறுமான சொத்துக்களைக் கொண்டு சென்றுவிட்டனர் எனத் தெரிகிறது.

# மூன்று நிபந்தனைகள்

சோவியத் ரஷ்யாவுடன் மாநாடு ஒன்றில் கூடிப் பேசுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் மூன்று நிபந்தனைகளை வெளியிட்டுள்ளாராம் :—

"(1) மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவது, மேற்கு ஐரோப்பிய ஒற்றுமை, ஆகியவை குறித்த பாரிஸ் உடன்படிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்;

(2) ரஷ்யாவுடன் உரையாடும் மாநாடு பயனுடையதா யிருக்கும் என்ற உத்திரவாதம் வேண்டும்;

(3) மாநாட்டிற்குப் போதிய ஆயத்தம் வேண்டும்," என்பவையே அந்த மூன்று நிபந்தனைகள்!

# புத்தர் திருத்தந்தம்

## தோண்டி எடுக்கப்படுகிறது

கொழும்பு, நவ. 22—

மத்திய இலங்கையில், 'போலன்வோ' எனும் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடத்திற்கு 30 மைல் தொலைவில் ஒரு பழங்கால ஸ்தூபி ஒன்றைத் தோண்டி எடுப்பது பற்றி இலங்கை பௌத்த ஜெயந்தி விழாக் குழுவினர் ஆலோசித்து வருகின்றனர் எனத் தெரிகிறது.

கண்டியில் உள்ள புத்தரின் திருத்தந்த ஆலயத்தைச் சேர்ந்த சில முக்கிய பௌத்த பிட்சுக்களால், இந்தத் தோண்டி எடுக்கும் யோசனை வெளியிடப்பட்டதாம்.

அந்த ஸ்தூபியைத் தோண்டி எடுத்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தால், 1956-ல் வருகிற புத்தரின் 25-வது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது வழிபடலாம் எனக் கருதுகிறார்களாம்.

புத்தர் திருத்தந்தச் சின்னம் பற்றிய வரலாற்றில், நான்கு திருத்தந்தச் சின்னங்கள் உண்டென்றும், அவற்றில் இரண்டு இந்தியாவிலிருப்பதாகவும், இரண்டு இலங்கையிலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஒன்று, கண்டியில் இப்போது வழிபடப் படுகிறது; இன்னுமொன்று இப்போது தோண்டியெடுக்கப்படும் ஸ்தூபியிலிருக்கலாம் என்று நம்பப்படுகிறதாம்.

தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில்தான், முதன் முதலில் இந்தத் திருத்தந்தம், அழிந்து கிடக்கும் அனுராதபுரத்திற்குக் கொண்டு வரப்பட்டதாம். அங்கிருந்து 'ரூவன்ன' எனும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு 'கிலி அபய' எனும் மன்னரிடம், அத்தந்தம் ஒப்புவிக்கப்பட்டதாக வரலாற்று நூலாசிரியர்கள் கருதுகின்றனர்.

# ஆசிரியருக்கு அஞ்சல் :

## தொண்டு செய்யாரோ!

ஆசிரியர் : 'நம் நாடு',

ஐயா,

"சென்னையிலிருந்து சுமார் 30 மைல் தூரத்திலுள்ள தின்னலூர், சிறுங்குணம், புத்தூர், மற்றும் சில கிராமங்களில் சுற்றிப் பார்வையிட்டால், சிரங்குப் புண்களால் பாதிக்கப்பட்டு வருந்தும் சிறுவர்களுக்கு மருத்துவம் செய்து குணப்படுத்தும் யோசனை கூட அங்குள்ளவர்களுக்கில்லை என்பது தெளிவாகும்.

"தின்னலூர் கிராமத்துச் சேரியில் உள்ள ஒரு கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டுமானால், அரைகுடம் தண்ணீருக்கு சுமார் ஒன்றரை மணி நேரம் காவல் கிடக்கவேண்டியிருக்கிறது. மேலும் அந்தக் கிணறு, பாதுகாப்பற்ற முறையில் கட்டப்பட்டுள்ளது.

"நாகரிகம் மிக்க இந்தக் காலத்திலும், பாதை, சுகாதாரம், மருத்துவம், கல்வி, குடிதண்ணீர் ஆகிய எந்த ஒரு வசதியுமின்றி மக்கள் வாழ்கின்றார்கள் என்பதைக் கண்டோம். எனவே அவர்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றங்காண, அம்மக்களை ஒன்றுதிரட்டி, தின்னலூரில் 'அரிசன முன்னேற்றச் சங்கம்' ஒன்றை நிறுவியுள்ளோம். வசதியும் வாய்ப்பும் பெற்றுள்ள தோழர்கள் மேற்படி ஊர்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்குத் தொண்டு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்," என்று தோழர்கள் எம். பி. வி. ராகவன், எஸ். எம். பாலசுந்தரம், எம். சண்முகம், எம். கோபால் ஆகியோர் கோருகின்றனர்.

ஃ ஃ ஃ

## கூலியைக் குறைக்காதீர்!

ஆசிரியர் : 'நம் நாடு'

ஐயா,

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சோழவந்தானிலுள்ள மரமேறும் (தேங்காய் வெட்டும்) தொழிலாளர்கள், தங்கள் சம்பளம் குறைக்கப்பட்டது குறித்து மிகத் துயர் அடைகிறார்கள். இதற்கு முன்னால், மதுத் தடை விதிப்பதற்கு முன்னரும், தேங்காய் விலை ஏறி—இறங்கி விற்ற காலத்திலேயும், போதுமான ஊதியத்தை தேங்காய் வியாபார முதலாளிகள், தொழிலாளர்களுக்கு அளித்து வந்தனர். இன்று முதலாளிகள், எவ்விதக் காரணமுமில்லாமல், அவர்களுக்குக் கொடுத்துவந்த கூலி (100—மரம் ஏறினால் ரூ. 3—8—0)யில் 8 அணாவைக் குறைத்துக்கொண்டும், அவர்களுக்கு கொடுத்துவந்த தேங்காய்கள் 10-ல், 4 தேங்காயைக் குறைத்துக்கொண்டும் விட்டார்கள். தொழிலாளர்கள் அனைவரும் முதலாளிகளிடம் சென்று தங்களுக்குப் பழைய கூலியே தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டும், அவர்கள் இணங்கவில்லை. எனவே, தொழிலாளர்கள் அனைவரும், தங்களுக்குப் பழைய விகிதப்படி கூலி கொடுக்கப்படும் வரையில் மரமேறுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டனர். அந்தச் சங்கத்திலுள்ள இன்னும் சில முதலாளிகள் கூலி உயர்வு தருவதாக ஒப்புக்கொண்டாலும் அவர்கள் கொடுக்கும் கூலியும் தொழிலாளிகளுக்குப் போதுமானதாயில்லை. எனவே, அவதியுறும் ஏழைத் தொழிலாளருக்குப் பழைய விகிதக் கூலியையே கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சு. குருசாமி,
சோழவந்தான், (மதுரை)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.